DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

**NAGAPATTINAM.**

**Sessions Case No.51/2015**

Deposition of Witness for Prosecution : P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : ஜெயபால் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 day of 19.09.2017.

முதல் விசாரணை -

நான் தென்னம்புலம் நடுகாட்டில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவத்தில் காயமுற்ற தியாகராஜன் என்பவரை தெரியும். அவர் தற்போதை ஆளுங்கட்சியான அ.இ.அ.தி.மு.கட்சியை சேர்ந்தவர். அவர் அந்த கட்சியில் பல்வேறு பதவிகளிலும் இருந்தார். ஆஜர் எதிரிகளை தெரியும். என் ஊரை சேர்ந்தவர்கள். 14.08.2003க்கு சுமார் 4 மாதங்களுக்கு முன்பாக நான் சார்ந்த கட்சி கொடி மரத்தை எதிரிகள் வெட்டி அப்புறபடுத்தினார்கள். எதிரிகள் பி.வி.குழந்தைவேலு மகன் பி.வி.கே.பிரபு என்பவரது இளைஞர் மன்றத்தை சேர்ந்தவர்கள். அந்த சம்பவம் தொடர்பாக நான் சார்ந்த கட்சியை சேர்ந்த அமிர்தலிங்கம் என்பவர் மேற்படி தியாகராஜன் என்பவரிடம் கூறி அவர் ஆலோசனையின் பேரில் மேற்படி அமிர்தலிங்கம் கரியாபட்டினம் காவல் நிலையத்தில் ஒரு புகார் தாக்கல் செய்தார். அந்த புகார் தொடர்பான குற்ற வழக்கு விசாரணை நிலுவையில் உள்ளது. 14.08.2003 தேதிக்கு 4 நாட்கள் முன்பாக எங்கள் ஊர் கடைதெருவிற்கு மேல்புறமாக உள்ள அய்யனார் கோவிலுக்கு செல்லும் பாதையில் நானும் மேற்படி தியாகராஜன், ரமேஷ்குமார், ஜெயராமன் ஆகியோர் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அங்கு வந்த ஒரு தனியார் ஜீப்பில் பி.வி.கே. பிரபு என்பவர் அமர்ந்திருந்தார். மேலும் அதே ஜீப்பில்

எதிரிகள் நால்வரும் அவருடன் அமர்ந்திருந்தார்கள். மேற்படி பிரபு எங்களை பார்த்து எங்கள் மன்ற ஆட்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறாயா இன்னும் ஒரு வாரத்தில் என்ன நடக்கிறது என்று பார் என்று கூறிவிட்டு ஜீப்பில் அங்கிருந்து போய்விட்டார்கள். அதன் பின்னர் 14.08.2003 அன்று மாலை 5.45 மணிக்கு செண்பகராயநல்லூரில் கட்டப்பட்டு வந்த தொகுப்பு வீடுகளை பார்வையிடுவதற்காக நானும் மேற்படி தியாகராஜன், ரமேஷ்குமார், ஓவர்சீயர் மனோகரன், வட்டார வளர்ச்சி அலுவலர் ராமசந்திரனுடன் போயிருந்தோம். மீண்டும் இரவு 7 மணிக்கு தென்னம்புலம் கிராமத்திற்கு திரும்பி வந்தோம். அப்போது வரும் வழியில் மயானசாலை ஆயக்காரன்புலம் சாலை சந்திக்கும் இடத்தில் உள்ள ஒரு பாலத்தின் அருகில் 1 முதல் 4 எதிரிகளும் பிரிக்கப்பட்ட வழக்கின் எதிரியான வெற்றிசெல்வன் என்பவரும் அவரவர் கையில் வைத்திருந்த அருவாளுடன் ஓடி வந்து எங்களை வழி மறித்தார்கள். 1வது எதிரி ராஜசிம்மன் பி.வி.கே.பிரபு மன்றத்தை எதிர்த்து கட்சி வளர்க்கிறாயா இத்தோடு ஒழிந்து போ என்று சொல்லி மேற்படி தியாகராஜனை அவரது வலது கன்னத்தில் அருவாளால் மாறி மாறி வெட்டினார். 3வது எதிரி தேவேந்திரன் தியாகராஜனை இறுக்கி பிடித்துக்கொண்டார். 2வது எதிரி மாதவன் அருவளால் தியாகராஜனை வலது கையில் வெட்டினார். இதை பார்த்த நானும் ரமேஷ்குமாரும் சம்பவத்தை தடுத்தோம். அப்போது 2வது எதிரி மாதவன் எங்களை பார்த்து நீங்களும் ஒழிந்து போங்கடா என்று சொல்லி அருவளால் என் தலையில் வெட்ட முயற்சி செய்தார் அதை நான் என் இடது கையால் தடுத்த போது என்னுடைய இடது கை பெருவிரலில் பட்டு காயம் ஏற்பட்டது. மீண்டும் அருவாளால் என்னை வெட்ட முயற்சி செய்தார். நான் சற்று பின் வாங்கவே அந்த அருவாள் வெட்டு என்னுடைய இடது கால் முட்டிக்கு மேலே பட்டு வெட்டுக்காயம் ஏற்பட்டது. 1வது எதிரி ராஜசிம்மன் அருவாளால் என் தலையை நோக்கி வெட்ட முயற்சி செய்தார். அதை நான் என் வலது கையால் தடுத்த போது என்னுடைய வலது முன் கையில் காயம் ஏற்பட்டது. அப்போது 3வது எதிரி தேவேந்திரன் எங்கிருந்தோ எடுத்து வந்த பாலகத்தியால் ரமேஷ்குமார் என்பவரை தலையில் வெட்ட முயற்சி செய்தார். அதை அவர் வலது கையால் தடுத்த போது அவரது வலது கையில் காயம் ஏற்பட்டது. அடிபட்ட நானும் ரமேஷ்குமார் மற்றும் தியாகராஜன் ஆகியோர் வலி பொருக்காமல் சத்தம் போட்டோம். அப்போது எங்களுடன் வந்த வட்டார வளர்ச்சி அலுவலர் ராமசந்திரன் மற்றும் ஓவர்சீயர் மனோகரன் மற்றும் சம்பவ இடத்திற்கு அருகில் இருந்த ஜெயராமன், சண்முகமோகன், வடிவேல் ஆகியோர் சத்தம்போட்டவாறு சம்பவ இடத்திற்கு ஓடிவந்தார்கள். அவர்கள் ஓடிவந்ததை பார்த்த எதிரிகள் தாங்கள் எடுத்து வந்த

ஆயுதங்களுடன் சம்பவ இடத்திலிருந்து ஓடிவிட்டார்கள். பின்னர் அங்கிருந்தவர்கள் போன் செய்து ஒரு வாடகை காரை வரவழைத்து அந்த கார் மூலம் அடிபட்ட எங்கள் மூவரையும் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். இரவு 10 மணிக்கு தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்தோம். 15.08.2003 அன்று காலை 6 மணிக்கு கரியாபட்டினம் உதவி ஆய்வாளர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு வந்து சம்பவம் பற்றி விவரம் கேட்டார். நான் அவரிடம் நடந்த சம்பவம் பற்றி அவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்தேன். பின்னர் அந்த வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். அந்த புகார் வாக்குமூலத்தில் அப்போது பணியில் இருந்த பணி மருத்துவரும் அந்த வாக்குமூலத்தில் சான்றொப்பம் செய்து கையொப்பம் இட்டுள்ளார். அன்று மதியம் 12 அல்லது 1 மணியளவில் வாய்மேடு காவல் நிலைய காவல் ஆய்வாளர் இந்த வழக்கு பற்றி என்னிடம் விசாரித்தார். அவரிடமும் நான் நடந்த சம்பவம் பற்றி கூறினேன். தற்போது என்னிடம் நீதிமன்றத்தில் காட்டப்படும் ஆயுதங்கள் தான் எதிரிகள் வைத்திருந்தார்கள். அந்த ஆயுதங்களால் தான் எங்களை தாக்கினார்கள். அந்த ஆயுதங்கள் சா.பொ.1 முதல் சா.பொ.3 வரை ஆகும். மேற்படி சான்று பொருட்கள் 1 முதல் 3 வரையிலானவைகளை 1 முதல் 3 வரை உள்ள எதிரிகள் பயன்படுத்திய ஆயுதங்கள் ஆகும். சாட்சி தியாகராஜன் இவ்வழக்கு சம்பவத்திற்கு பிறகு 2007ஆம் ஆண்டு நடந்த வேறு ஒரு சம்பவத்தில் கொலை செய்யப்பட்டு இறந்துவிட்டார். அது தொடர்பான வழக்கும் இதே நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது.

<u>குறுக்கு விசாரணை -</u>

சம்பவம் நடந்த இடத்திற்கும் தியாகராஜன் என்பவரது வீட்டிற்கும் இடையே சுமார் 2 அல்லது 3 கி.மீ. தூரம் இருக்கும். எனக்கும் எதிரிகளுக்கும் எந்தவிதமான முன் விரோதமும் கிடையாது. ஆயுதங்களை பார்த்தால் எந்த எந்த எதிரிகள் எந்த எந்த ஆயுதங்களை பயன்படுத்தினார்கள் என்று என்னால் கூறமுடியும் என்று நான் போலீசாரிடம் கூறவில்லை. தனிப்பட்ட அடையாளங்கள் எதையும் வைத்து நான் ஆயுதங்களை அடையாளம் காட்டவில்லை. சம்பவத்திற்கு பிறகு சா.பொ.1 முதல் 3 வரை உள்ள ஆயுதங்களை தற்போது தான் நான் நீதிமன்றத்தில் பார்க்கிறேன். சா.பொ.1 முதல் 3 வரையிலான ஆயுதங்களுக்கும் இந்த எதிரிகளுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்பதும் போலீசார் சொன்னதை கேட்டும் தற்போது பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்திற்கு 4 நாட்கள் முன்பாக பி.வி.கே.

பிரபு என்பவர் எதிரிகளுடன் ஜீப்பில் வந்து எங்களை மிரட்டி சென்றது தொடர்பாக நாங்கள் யாரும் காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை. அவ்வாறு பி.வி.கே.பிரபு எதிரிகளுடன் வந்து எங்களை மிரட்டவில்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சம்பவத்தை தொடர்ந்து என்னுடைய மற்றும் இதர காயமுற்ற நபர்களின் ஆடைகளில் இரத்த கறை ஏற்பட்டது. நான் அணிந்திருந்த அந்த இரத்த கறை படிந்த ஆடைகளை கழற்றிவிட்டு வேறு ஆடைகளை அணிந்துகொண்டு மருத்துவமனைக்கு சென்றேன். எதிரிகள் அனைவரின் கையிலும் அருவாள் வைத்திருந்தார்கள் என்று புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளேன். அதே போல் 1வது எதிரி ராஜசிம்மன் 2வது எதிரி மாதவன் ஆகியோர் அருவாளால் என்னை தாக்கிய விவரத்தை கூறியுள்ளேன். அதே போல் 3வது எதிரி தேவேந்திரன் பாலகத்தியால் சாட்சி ரமேஷ்குமார் என்பவரை தாக்கிய விவரத்தை புகார் வாக்குமூலத்தில் கூறியுள்ளேன். சம்பவத்திற்கு பிறகு எதிரிகள் எந்த திசையை நோக்கி ஓடினார்கள் என்று நான் புகார் வாக்குமூலத்தில் குறிப்பிட்டு கூறவில்லை. மேற்சொன்ன விவரங்களை நான் புகார் வாக்குமூலத்தில் கூறவில்லை என்பதும் தற்போது மிகைப்படுத்தி சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. 15.08.2003 அன்று மதியம் 12 அல்லது 1 மணியளவில் வாய்மேடு காவல் நிலைய ஆய்வாளர் என்னை விசாரிக்கவே இல்லை என்பதும் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவே இல்லை என்றால் சரியல்ல. 16.06.2005 அன்று காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்காமல் நான் அவரிடம் வாக்குமூலம் கொடுத்தது போல் ஜோடனை செய்துகொண்டார் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனையில் வெளிநோயாளிகள் பிரிவில் சேர்க்கப்பட்டு எனக்கு வெளிநோயாளியக சிகிச்சை அளிக்கப்பட்டு 14.08.2003 அன்று இரவே சிகிச்சை முடிந்து வெளியே வந்துவிட்டேன். ஆனால் மருத்துவமனை வளாகத்திலேயே நான் காத்திருந்தேன். 15.08.2003 அன்று அதிகாலையில் நான் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் இல்லை என்பதும் அன்று காலை நான் கரியாபட்டினம் உதவி ஆய்வாளரிடம் நான் புகார் வாக்குமூலம் எதுவும் மருத்துவமனை வளாகத்தில் வைத்து கொடுக்கவில்லை என்பதும் சரியல்ல. 15.08.2003 அன்று பகல் 11 மணிக்கு நான் கரியாபட்டினம் காவல் நிலையத்தில் நேரில் ஆஜராகி எழுத்து மூலமாக ஒரு புகார் கொடுத்துள்ளேன் என்பதும் அந்த புகாரில் எதிரிகள் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை என்பதும் அந்த புகார் வழக்கிற்கு ஒத்து வராது என்பதால் தற்போது அந்த எழுத்து மூலமான புகாரை வேண்டுமென்றே மறைத்துவிட்டோம் என்பதும் சரியல்ல. அ.சா.ஆ.1 புகார் வாக்குமூலம் 15.08.2003 அன்று பிற்பகல் 3 மணியளவில் எதிரிகள் பெயரையும் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தில் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

மருத்துவமனையில் என்னை சிகிச்சைக்காக சேர்த்த போது தெரிந்த 2 நபர்கள் என்னை அருவாளால் தாக்கியதாக கூறியுள்ளேன். வெளிநோயாளிகள் பிரிவு மருத்துவராக பணிபுரிந்த டாக்டர் ஜாகீர் என்பவரிடம் தெரிந்த நபர் என்னை அடித்ததாக கூறியுள்ளேன் என்று சொன்னால் அது பற்றி எனக்கு தற்போது ஞாபகமில்லை. ஆயுதங்களால் தாக்கப்பட்டதாக நான் மருத்துவரிடம் கூறியது பற்றி எனக்கு தற்போது ஞாபகமில்லை. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்பதும் அதன் காரணமாகவே நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. வட்டார வளர்ச்சி அலுவலர் ராமசந்திரன் மற்றும் ஓவர்சீயர் மனோகரன் ஆகியோர் சம்பவத்தை பார்த்தார்களா இல்லையா என்று எனக்கு தெரியாது. ஆனால் சத்தம் கேட்டு அவர்கள் வந்தார்கள். வழக்கு சம்பவம் நடந்த தேதியில் மேற்படி தியாகராஜன் என்பவருடைய மனைவி வசந்தா என்பவர் ஊராட்சி மன்ற தலைவராக இருந்தார். மேற்படி தியாகராஜன் என்பவர் செண்பகராயநல்லூரில் தொகுப்பு வீடுகள் கட்டுவது தொடர்பாக அதிகாரிகளுடன் அந்த இடத்தை அடிக்கடி பார்வையிட்டு வந்தார். அவ்வாறு தொகுப்பு வீடுகள் கட்டியதில் முறைகேடுகள் நடைபெற்றதாகவும் அதனை அடுத்து வேறு நபர்கள் தியாகராஜன் வீட்டிற்கு சென்று அவரிடம் பிரச்சனை செய்தார்கள் என்பதும் அப்போது அங்கு இருந்த ஒரு நபர் தியாகராஜனை கத்தியால் தாக்கி காயப்படுத்தினார் என்பதும் சொன்னால் சரியல்ல. அப்படி ஒரு சம்பவமே நடக்கவில்லை. நான் சொன்ன இடத்தில் நான் சொன்னவாறு சொன்ன நேரத்தில் எந்தவித சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தொகுப்பு வீடுகள் கட்டப்பட்ட இடத்தில் பொது மக்கள் எங்களிடம் முறைகேடுகள் தொடர்பாக வாக்குவாதத்தில் இடுபட்டார்கள் என்பதும் அப்போது ஏற்பட்ட தள்ளுமுள்ளில் நானும் சாட்சி ரமேஷ்குமாரும் கீழே விழுந்ததில் அங்குள்ள கூர்மையான கட்டுமான பொருட்கள் பட்டு எங்களுக்கு சொற்ப காயங்கள் ஏற்பட்டன என்று சொன்னால் சரியல்ல. மேற்படி முறைகேடுகள் தொடர்பாக பொதுமக்களை எதிரிகள் தூண்டிவிட்டார்கள் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் எதிரிகள் மீது பொய் புகார் கொடுத்து நான் தற்போது அதற்கேற்றார்போல் பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல. மேற்படி தியாகராஜன் மருத்துவமனையில் இருந்தபொழுது 15.08.2003 அன்று மதியம் 12 அல்லது 1 மணியளவில் வாய்மேடு காவல் நிலைய ஆய்வாளர் மருத்துவமனையின் உள்ளே வைத்து விசாரித்தார். ஆனால் நான் அப்போது மருத்துவமனைக்கு வெளியே நின்றிருந்தேன். 14.08.2003 அன்று இரவு 12 மணிக்கு முன்பாகவே மேற்படி தியாகராஜன் என்பவரிடம் இருந்து ஒரு புகார் வாக்குமூலம் பெறப்பட்டது என்பதும் அந்த

புகாரில் ஒரு நபர் தன்னை வீட்டில் வைத்து தாக்கியதாக கூறியுள்ளார் என்பதும் சரியல்ல. அந்த புகாரிலும் எதிரிகள் பெயர் குறிப்பிடப்படவில்லை என்றால் அப்படி ஒரு புகார் தியாகராஜனால் கொடுக்கப்படவே இல்லை. தியாகராஜன் கொடுத்ததாக சொல்லப்படும் புகார் வாக்குமூலம் வழக்கிற்கு ஒத்து வராது என்பதால் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

மறு விசாரணை -

இல்லை.

# DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
**NAGAPATTINAM.**
## Sessions Case No.51/2015

Deposition of Witness for Prosecution : P.W.2

| | | | |
|---|---|---|---|
| Name | : ரமேஷ்குமார் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 day of 24.10.2017.

முதல் விசாரணை -

நான் தென்னம்புலம் அண்ணாநகரில் குடியிருக்கிறேன். விவசாயம் செய்கிறேன். சாட்சி தியாகராஜன் தற்போது உயிருடன் இல்லை. ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1 ஜெயபால் என்பவரை தெரியும். என் ஊரை சேர்ந்தவர். மேற்படி தியாகராஜன் என்பவர் 2003ஆம் ஆண்டு அ.இ.அ.தி.மு.க. கட்சியை சார்ந்த எம்.ஜி.ஆர் மன்ற மாவட்ட துணை செயலாளராக இருந்தார். மேலும் கட்சியின் கிளை செயலாளராகவும் பணிபுரிந்து வந்தார். 14.08.2003 அன்று இந்த வழக்கு சம்பவம் நடந்தது. அதற்கு சுமார் 4 மாதங்களுக்கு முன்பு அ.இ.அ.தி.மு.க. கட்சி கொடி கம்பத்தை 1வது 2வது எதிரிகளும் மற்றும் கண்ணன் மற்றும் அய்யப்பன் ஆகியோர் வெட்டி சாய்த்துவிட்டார்கள். அப்போது அவர்கள் அனைவரும் பி.வி.கே. பிரபு இளைஞர் நற்பணி மன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தார்கள். அவ்வாறு கொடி கம்பத்தை வெட்டபட்ட தகவலை எங்கள் கட்சியை சேர்ந்த அமிர்தலிங்கம் என்பவர் தியாகராஜனுக்கு தெரிவித்தார். அவரது ஆலோசணையின் பேரில் அமிர்தலிங்கம் காவல் நிலையத்தில் அந்த சம்பவம் தொடர்பாக 1வது 2வது எதிரிகள் மற்றும் கண்ணன், அய்யப்பன் ஆகியோர்கள் மீது புகார் கொடுத்தார். வழக்கு பதிவு செய்யப்பட்டு புலன் விசாரணையில் இருந்து வந்தது. 14.08.2003 தேதிக்கு சுமார் 4 நாட்களுக்கு முன்பு தென்னம்புலம் அய்யனார் கோவிலுக்கு செல்லும் பாதையில் நானும் சாட்சி தியாகராஜன் மற்றும் அ.சா.1

ஜெயபால் சாட்சி ஜெயராமன் ஆகியோர் நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்போது அந்த பாதையில் கிழக்கில் இருந்து ஒரு ஜீப் வந்தது. அந்த ஜீப்பில் பி.வி.கே.பிரபு என்பவர் அமர்ந்து வந்தார். எங்களை பார்த்ததும் ஜீப்பை நிறுத்தி எங்கள் மன்றத்தை சேர்ந்த ஆட்கள் மீதே காவல் நிலையத்தில் புகார் கொடுக்கிறீர்களா என்றும் இன்னும் 1 வாரத்தில் என்ன நடக்கிறது என்று பாருங்கள் என்று கூறினார். மேற்படி ஜீப்பில் அவருடன் ஆஜர் எதிரிகள் நால்வரும் மற்றும் பிரிக்கப்பட்ட வழக்கின் எதிரி வெற்றிசெல்வன் என்பவரும் அமர்ந்திருந்தார்கள். அதன் பின்னர் 14.08.2003 அன்று மாலை சுமார் 5.45 மணிக்கு செண்பகராயநல்லூர் தெற்கு கிராமத்தில் தொகுப்பு வீடுகள் கட்டுவது தொடர்பாக நிலத்தை பார்வையிடுவதற்காக வட்டார வளர்ச்சி அலுவலர் ராமசந்திரன் மற்றும் ஓவர்சீயர் மனோகரன், சாட்சி தியாகராஜன், அ.சா.1 ஜெயபால் மற்றும் நானும் மூன்று மோட்டார் சைக்கிளில் சென்று பார்த்துவிட்டு மீண்டும் இரவு சுமார் 7 மணியளவில் அதே மோட்டார் சைக்கிள்களில் தென்ம்புலம் மயானகரை வாய்க்கால் அருகே வந்துகொண்டிருந்த போது அங்கிருந்த ஒரு பாலத்தின் அருகே எதிரிகள் அனைவரும் கைகளில் கத்தி, அருவாள் போன்ற ஆயுதங்களுடன் நின்றுகொண்டிருந்தார்கள். நாங்கள் மோட்டார் சைக்கிள்களில் முன் பின்னாக சென்றுகொண்டிருந்தோம். எங்களை பார்த்தவுடன் எதிரிகள் அனைவரும் வழிமறித்து "எங்களையும் பி.வி.கே.பிரபு என்பவரையும் எதிர்த்து கட்சி நடத்துகறீர்களா என்று கேட்டு" 1வது எதிரி ராஜசிம்மன் கையில் வைத்திருந்த அருவாளால் சாட்சி தியாகராஜனை இத்தோடு ஒழிந்து போ என்று சொல்லி அவரது வலது பக்க கன்னத்தில் மாறி மாறி வெட்டினார். 3வது எதிரி தேவேந்திரன் தியாகராஜனை தப்பிக்க விடாமல் பிடித்துக்கொண்டார். 2வது எதிரி மாதவன் அருவாளால் தியாகராஜனை வலது கையில் வெட்டினார். அதை பார்த்து நானும் அ.சா.1 ஜெயபாலும் தியாகராஜனை காப்பாற்றுவதற்காக ஓடினோம். அப்போது 2வது எதிரி மாதவன் அருவாளால் சாட்சி அ.சா.1 ஜெயபாலை வெட்ட முற்பட்ட போது அவர் இடது கையால் தடுத்தார். அந்த அருவாள் வெட்டு அவரது இடது கை விரலில் பட்டு வெட்டு காயங்கள் ஏற்பட்டது. மேலும் அவரது இடது கால் முட்டிக்கு மேல் 2வது எதிரி மாதவன் அருவாளால் வெட்டினார். 1வது எதிரி ராஜசிம்மன் அருவாளால் அ.சா.1 ஜெயபாலை தலையை நோக்கி வெட்டிய போது அதை ஜெயபால் வலது கையால் தடுத்து அதன் காரணமாக அவரது வலது முன் கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டது. 3வது எதிரி தேவேந்திரன் கையில் வைத்திருந்த பாலாகத்தியால் என்னுடைய தலையை நோக்கி இத்தோடு ஒழிந்து போ என்று வெட்ட முற்பட்ட போது நான் அதை எனது வலது கையால் தடுத்தேன். எனது

வலது முன் கையில் காயம் ஏற்பட்டது. அடிபட்ட நாங்கள் வலி தாங்க முடியாமல் சத்தம் போட்டோம். பின்பு அருகில் இருந்த சாட்சி சண்முகம் மோகன், ஜெயராமன், வட்டார வளர்ச்சி அலுவலர் ராமசந்திரன், ஓவர்சீயர் மனோகரன் ஆகியோர் ஓடிவந்தார்கள். அவர்கள் வருவதை பார்த்ததும் எதிரிகள் ஆயுதங்களுடன் கிழக்கே நோக்கி ஓடிவிட்டார்கள். பின்னர் ஒரு வாடகை கார் மூலம் அடிபட்ட நாங்கள் மூவரும் தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு சென்று சிகிச்சைக்காக சேர்ந்து சிகிச்சை பெற்றோம். நான் மூன்று நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். 15.08.2003 அன்று போலீசார் இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக என்னை விசாரித்தார். சாட்சி சா.பொ.3 பாலாகத்தியை பார்த்து அந்த ஆயுதத்தால் 3வது எதிரி தேவேந்திரன் தன்னை தாக்கியதாக அடையாளம் காட்டி சாட்சியமளிக்கிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை -

போலீஸ் விசாரணையின் போது ஆயுதங்களை பார்த்தால் என்னால் அடையாளம் காட்ட முடியும் என்று நான் குறிப்பிட்டு கூறவில்லை. சா.பொ.3 பாலாகத்திக்கு தனிப்பட்ட அடையாளம் எதுவும் இல்லை. போலீசார் கேட்டுக்கொண்டதால் நான் சா.பொ.3யை பற்றி பொய்யாக சாட்சியமளித்துள்ளேன் என்றால் சரியல்ல. 14.08.2003க்கு 4 நாட்களுக்கு முன்பாக பி.வி.கே.பிரபு எங்களை மிரட்டியது தொடர்பாக நாங்கள் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சொன்னது போல் அவ்வாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பதும் இந்த வழக்கின் தோதிற்காக நான் அப்படி ஒரு சம்பவம் நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு சம்பவத்தின் போது நாங்கள் சார்ந்த அ.இ.அ.தி.மு.க. கட்சி ஆளுங்கட்சியாக இருக்கிறது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தின் பெயர் கலை நகர். என்னுடைய ஆடைகளிலும் சம்பவ இடத்திலும் இரத்த கரைகள் இருந்தன. நாங்கள் மூவரும் ஒருவர் பின் ஒருவராக தாக்கப்பட்டோம். மருத்துவமனையில் சேர்ந்த போது 3வது எதிரி தேவேந்திரன் தாக்கியதாக அவர் பெயரை குறிப்பிட்டு கூறியுள்ளேன். செண்பகராயநல்லூர் என்ற குக்கிராமம் தென்னம்புலம் கிராமத்துடன் இணைந்தது ஆகும். நான் சொன்ன தேதி, நேரம் மற்றும் இடத்தில் நான் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்பதும் 3வது எதிரி என்னை எந்த ஆயுதத்தாலும் தாக்கவில்லை என்பதும் அதே போல் 1, 2வது எதிரிகளும் அ.சா.1 ஜெயபால் மற்றும் சாட்சி தியாகராஜன் என்பவரையும் தாக்கவில்லை என்றால் சரியல்ல. செண்பகராயநல்லூருக்கு தொகுப்பு வீடுகள்

கட்டும் இடத்தை நானும் அ.சா.1 ஜெயபாலும் பார்வையிட சென்றபோது அங்கிருந்த பொது மக்கள் என்னிடமும் அ.சா.1 ஜெயபாலிடமும் தொகுப்பு வீடுகள் தொடர்பாக தகராறு செய்து எங்களை தாக்கி கீழே தள்ளியதில் எங்களுக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. அங்கு குவித்து வைக்கப்பட்டிருந்த கட்டுமான பொருட்கள் மீது நாங்கள் விழுந்ததில் எங்களுக்கு கைகளில் காயம் மற்றும் வீக்க காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. சாட்சி தியாகராஜனை வேறு ஒரு நபர் அதே தொகுப்பு வீடுகள் கட்டும் பிரச்சனை தொடர்பாக அவரது வீட்டிற்கு அருகில் வைத்து கத்தியால் தாக்கபட்டார் என்றால் சரியல்ல. தொகுப்பு வீடுகள் கட்டுவது சம்பந்தமான பிரச்சனையை எதிரிகள் பொது மக்கள் மூலம் தூண்டிவிடுவதாக கருதி நாங்கள் ஆளுங்கட்சியை சேர்ந்தவர்கள் என்ற செல்வாக்கை பயன்படுத்தி எதிரிகளை அரசியல் ரீதியாக முடக்க வேண்டும் என நினைத்து அவர்கள் மீது பொய் புகார் கொடுத்து அதில் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வட்டார வளர்ச்சி அலுவலர் ராமசந்திரன், ஓவர்சீர் மனோகரன் ஆகியோர் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி, நேரம் மற்றும் இடத்தில் எங்களுடன் வரவில்லை என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்பதும் காவல் ஆய்வாளர் இந்த வழக்கிற்கு ஏற்றார் போல் ஜோடித்துக்கொண்டோம் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS

Chapter XXIII code of Criminal Procedure

**IN THE COURT OF SESSIONS JUDGE,**

**NAGAPATTINAM.**

**Sessions Case No.51/2015**

Deposition of Witness for Prosecution : P.W.3

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வராணி | Father's Name | : கண்ணையன் |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 day of 24.10.2017.

முதல் விசாரணை -

நான் தென்னம்புலம், தெற்குகாடு, கலைநகரில் குடியிருக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். அ.சா.1 மற்றும் 2யை எனக்கு தெரியாது. 1வது எதிரி ராஜசிம்மன் மற்றும் அவருடைய தம்பி மாதவன் ஆகியோரை தெரியும். 1வது எதிரி ராஜசிம்மன் கடைசியாக எங்கள் கிராம பஞ்சாயத்து தலைவராக பணிபுரிந்தார். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

1வது எதிரி ராஜசிம்மனுக்கு முன்பாக யார் பஞ்சாயத்து தலைவராக இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்ததாகவும் அப்போது சம்பவத்தன்று சாட்சி தியாகராஜன் மற்றும் அ.சா.1 ஜெயபால் அ.சா.2 ரமேஷ்குமார் ஆகியோர் தனித்தனியாக மோட்டார் சைக்கிளில் சுடுகாட்டு சாலையில் வந்துகொண்டிருந்தவர்களை எதிரிகள் நால்வரும் கைகளில் ஆயுதங்களுடன் அவர்களை

வழி மறித்து தாக்கி அவர்களை காயப்படுத்தியதாகவும் அதை நான் பார்த்து சத்தம் போட்டதாகவும் என் கணவர் கண்ணையன் மற்றும் சாட்சிகள் ஜெயராமன், வடிவேல், சண்முகம் மோகன், ஓவர்சீயர் மற்றும் பி.டி.ஓ. ஆகியோரும் ஓடிவந்து சம்பவத்தை பார்த்ததாகவும் எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் நான் சாட்சி தியாகராஜனுக்கு குடிக்க தண்ணீர் கொடுத்ததாகவும் பின்னர் அடிபட்டவர்களை ஒரு கார் மூலம் அங்கிருந்தவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE,**
**NAGAPATTINAM.**
**Sessions Case No.51/2015**

Deposition of Witness for Prosecution : P.W.4

| | | | |
|---|---|---|---|
| Name | : கண்ணையன் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 day of 24.10.2017.

முதல் விசாரணை -

நான் தென்னம்புலம், தெற்குகாடு, கலைநகரில் குடியிருக்கிறேன். நான் விவசாய கூலி வேலை செய்கிறேன். அ.சா.3 செல்வராணி எனது மனைவி. அ.சா.1 மற்றும் 2யை எனக்கு தெரியாது. 1வது எதிரி ராஜசிம்மன் மற்றும் அவருடைய தம்பி மாதவன் ஆகியோரை தெரியும். 1வது எதிரி ராஜசிம்மன் கடைசியாக எங்கள் கிராம பஞ்சாயத்து தலைவராக பணிபுரிந்தார். இந்த வழக்கு சம்பவம் தொடர்பாக எதுவும் தெரியாது. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

1வது எதிரி ராஜசிம்மனுக்கு முன்பாக யார் பஞ்சாயத்து தலைவராக இருந்தார்கள் என்று எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்ததாகவும் அப்போது இவ்வழக்கு சம்பவத்திற்கு 4 மாதங்களுக்கு முன்பாக அ.இ.அ.தி.மு.க கொடி கம்பத்தை வெட்டியது தொடர்பாக எதிரிகளுக்கும் அ.சா.1, அ.சா.2

ஆகியோர்களுக்கும் இடையே முன்விரோதம் இருந்து வந்தது என்றும் இந்த வழக்கு சம்பவத்தன்று சாட்சி தியாகராஜன் மற்றும் அ.சா.1 ஜெயபால் அ.சா.2 ரமேஷ்குமார் ஆகியோர் தனித்தனியாக மோட்டார் சைக்கிளில் சுடுகாட்டு சாலையில் வந்துகொண்டிருந்தவர்களை எதிரிகள் நால்வரும் கைகளில் ஆயுதங்களுடன் அவர்களை வழி மறித்து தாக்கி அவர்களை காயப்படுத்தியதாகவும் சத்தம் கேட்டு நானும் சாட்சிகள் ஜெயராமன், வடிவேல், சண்முகம் மோகன், ஓவர்சீயர் மற்றும் பி.டி.ஓ. ஆகியோரும் ஓடிவந்து சம்பவத்தை பார்த்ததாகவும் எதிரிகள் ஆயுதங்களுடன் அங்கிருந்து ஓடிவிட்டதாகவும் பின்னர் அடிபட்டவர்களை ஒரு கார் மூலம் அங்கிருந்தவர்கள் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும் போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு பயந்துகொண்டு உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை -

இல்லை.